# சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි

22.12.2020 செவ்வாய்க்கிழமை


## சாவு 181

கொழும்பு, டிசெ. 22
நாட்டில் மேலும் 5 கொரோனா உயிரிழப்புக்கள் பதிவாகி யுள்ளன. வெலிக் கடை சிறைச்சாலையிலி ருந்த 68 வயதான ஆண் கைதி ஒருவர், கடந்த

8

# பண்டிகைக்கால முடக்கம் இப்போது கூற முடியாது!!



### அமைச்சரவைப் பேச்சாளர் மழுப்பல்

கொழும்பு, டிசெ. 22
கொரோனா பரவலைக் கட்டுப்ப டுத்துவதற்காக முழு நாட்டையும் முடக்குவது தொடர்பில் இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாள ரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் இன்று காணொலிமூலம் நடை பெற்றது.
இதன்போது, நாட்டில் பல பகுதிக ளிலும் கொரோனா பரவியுள்ளது. நத்தார் பண்டிகை காலமும் வருகின்றது. வைரஸ் பரவ லைக் கட்டுப்படுத்துவதற்காக

2

## பிரிட்டனுக்கான கதவை இலங்கையும் மூடியாது!!

கொழும்பு, டிசெ. 22
பிரிட்டனிலிருந்து வரும் விமா னங்கள் நாளை அதிகாலை 2 மணிக்குப் பின்னர் இலங்கையில் தரையிறங்குவதற்கு அனுமதிக் கப்படாது என்று சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

2



## இரணைமடு வான்கதவு திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 22
கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர் பார்க்கப்பட்டளவு மழைவீழ்ச்சி இன்று மாலை கிடைக்காமை யால், இரணைமடுக் குளத்தின்

2

# கொரோனாவால் சுனாமி நினைவேந்தலுக்கும் தடை!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 22
எதிர்வரும் 26ஆம் திகதி சுனாமி நினைவேந்தலை நினைவால யங்களில் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கொரோனா காரண மாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

2

## கொரோனா உயிரிழப்பு கிழக்கில் 3

அம்பாறை, டிசெ. 22
கிழக்கில் கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகிய மூன்றாவது நபரும் உயிரிழந்துள்ளதாக அம்மாகாண சுகாதார சேவை

2

## பிரிட்டனைத் தாக்கும் கொடூர வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம்!!!

கொழும்பு, டிசெ. 22
பிரிட்டனில் அடையாளம் காணப்பட்டுள்ள மரபணு மாற்றமடைந்த கொடூர கொரோனா வைரஸ் இலங்கை யிலும் பரவுவதற்கான அபா யம் உள்ளதாக எச்சரிக்கை

2



## மாஸ்க் அணியாதோருக்கு கிளிநொச்சியில் வழக்குத்தாக்கல்

கிளிநொச்சி, டிசெ. 22
கிளிநொச்சி நகரப் பகுதியில் முகக்கவசம் அணியாத 4 பேருக்கு எதிராக வழக்

2



### யாழ். பல்கலையில்
## தாமதப்படுத்தப்பட்ட போதனைசார் நியமனங்களுக்கு பேரவை அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக நீண்ட காலமாக வழங்கப்படாதிருந்த போதனைசார் விரிவுரையாளர்கள் மற்றும் போதனாசிரி யர்கள் நியமனங்களை வழங்குவதற்கு

2



## வீட்டில் கஞ்சாச் செடி வளர்த்தவர் கைது

கொடிகாமம், டிசெ. 22
நாவற்குழி 300 வீட்டுத் திட்ட பகுதி யில் வீட்டில் கஞ்சா செடி வளர்த்த சந்தேகத்தில் நபர் ஒருவர் சாவகச் சேரி பொலிஸாரால் இன்று அதிகாலை கைது செய்யப்பட் டுள்ளார். அத்துடன் காலாவதி

2

# தமிழீழக் காப்பு தீர்மானத்தை தாயகத்தில் நிறைவேற்றுங்கள்

### காசி ஆனந்தன் நிலைமையை விளக்கி வலியுறுத்துகின்றார்

கொழும்பு, டிசெ. 22
இரு தேசக் கொள்கையை வலியுறுத் தும் தலைவர் கஜேந்திரகுமார் இருக்கிறார். தமிழினம் இலங்கையில் சிங்கள இனம் தோன்றுவதற்கு முன்பு தோன்றி வாழ்ந்த பழம் பெரும் இனம் என்னும் வரலாற் றுண்மையை நாடாளுமன்றத்

2

# பண்டிகைக்கால...

பயணக் கட்டுப்பாடுகள் எதுவும் விதிக்கப்படுமா அல்லது ஊரடங்கு பிறப்பிக்கும் திட்டம் எதுவும் உள்ளதா என்று ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்ட வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா பரவல் குறித்து தினமும் ஆராயப்பட்டு வருகின்றது. பரவ லைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. பல இடங்களில் அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொண்டு அது தொடர்பான ஆவ ணத்தை வைத்திருப்பவர்களை மாத்திரமே நுவரெலியாவுக்கு சுற்றுலாவுக்கு அனுமதிக்கும் திட்ட மும் நடைமுறையில் உள்ளது.
இப்படி பல நடவடிக்கைகள் இடம் பெற்றுவருகின்றன.
ஊரடங்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தற்போதே கூறமுடியாது.
நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையிலும் அல்லது நிலைமையைக் கட்டுப்படுத்தக்கூ டிய சூழல் இருந்தும், எதிர்காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக வும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இது குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை.
சூழ்நிலைக்கமையவே அந்த முடிவு எடுக்கப்படும், என்றார். (ஓ,44)

# சுனாமி....

2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இலங்கையை சுனாமி தாக்கியது. இதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களி லேயே அதிகளவானோர் உயிரிழந்தனர். இவர்கள் நினை வாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்வேறு இடங்களி லும் சுனாமி நினைவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
அங்கு டிசெம்பர் 26ஆம் திகதி காலையில் நினைவேந்தல்கள் நடைபெறுவது வழமை. இந்த ஆண்டு நினைவேந்தல்களுக்கு அனுமதி வழங்கப்படுமா என்பது தொடர்பில் கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வாவிடம் கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு கூறினார்.
'எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் அவதானம் தேவை என்று நாம் ஏற்கனவே அறிவித்துவிட்டோம். கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலங்களில் அதிக கவனம் தேவை. ஜனவரி மாதத்தில் கொரோனா தொற்றை நாம் குறைக்கவேண்டுமாக இருந்தால் இந்தமாதத்தின் இறுதி வாரத்தில் அனைத்துப் பொது நிகழ்வுகள், களியாட்டங்கள் உள்ளிட்ட அனைத்தையும் தவிர்க்க வேண்டும். எனவே அந்தக் காலப் பகுதியில் எந்தவொரு பொது நினைவேந்தல்கள் உள்ளிட்ட எதற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது. சுனாமியால் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்படுவது வழமை. அந்த நேரத்தில் வீட்டிலிருந்து சுனாமியால் உயிரி ழந்தவர்களை நினைவுகூர முடியும்' என்றார் இராணுவத் தளபதி. (ஓ,5,22)



# பிரிட்டனுக்கான...

பிரிட்டனில் வீரியம் கூடிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட் டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் பிரிட் டனிலிருந்தான விமான சேவைகளை நிறுத்தியுள்ளன என்பது குறிப்பி டத்தக் கது. (ஓ,இ)

# கொரோனா...

கள் பணிமனை பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித் துள்ளார். கிழக்கு மாகாணத்தில் இதுவரை 778கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர். (ஓ,இ)

# தாமதப்படுத்தப்பட்ட....

பேரவை அனுமதி வழங்கியுள்ளது. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.
இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் 6 ஆண்டுகளாக நியமிக் கப்படாதிருந்த விரிவுரையாளர் பதவிகள் உள்ளிட்ட பல பதவி களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 12 நியம னங்களுக்கான அனுமதியை பேரவை வழங்கியுள்ளது. (ஓ,5)

# மாஸ்க்...

குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். சரவணபவன் தெரிவித்தார்.
கிளிநொச்சி நகரப் பகுதியில் பொதுச் சுகா தார பரிசோதகர்கள் இன்றைய தினம் மேற் கொண்ட திடீர் சோதனையின் போதே முகக் கவசம் அணியாத 4பேருக்கு எதிராக வழக்கு கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (ஓ,316)

# தமிழீழக் காப்பு தீர்மானத்தை....

தில் இடித்துரைத்த தலைவர் விக்னேஸ்வரன் இருக்கிறார். இரா.சம்பந்தர் போன்றவர்கள் இந்தத் தலைவர்களுடன் இணைந்து வட்டுக் கோட்டை மாநாட்டைப் போல் ஒரு மாநாட் டைக் காலம் தாழ்த்தாமல் நடத்தி 'தமிழீழ மீட்பு' என்று தீர்மானம் இயற்றுவதில் உங்களுக் குச் சட்டச் சிக்கல்கள் இருக்குமானால் 'தமிழீ ழக் காப்பு' என்றாவது தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
தமிழீழக் காப்பை உறுதி செய்வதில் இந்திய அரசு முழு அளவில் உதவவேண்டும் என்னும் தமிழீழ மக்களின் எதிர்ப்பார்ப்பையும் தமிழர் தலைவர்கள் இம்மாநாட்டில் தீர்மானமாய் இயற்றல் வேண்டும். உலகெங்கும் பரவி வாழும் ஈழத்தமிழர் நெஞ்சில் மட்டும் அல்ல அனைத்து உலகத் தமிழர் நெஞ்சிலும் 'தமிழீ ழும் தமிழர் தாயகம்' என்னும் உரிமைப் போர்க் கனல் பற்றி எரிய உணர்வூட்டுவோம். இவ் வாறு ஈழத் தமிழர் நட்புறவு மையத்தின் தலைவ ரும், உணர்ச்சிக் கவிஞருமான காசி ஆனந்தன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,
அண்மையில் இலங்கை சென்ற இந்திய அதிகா ரிகள் இரா.சம்பந்தனிடம் 'தமிழீழத்தைக் கைவிடுங்கள்' என்று சொன்னார்களா அல்லது 'தமிழ் மக்கள் தமிழீழக் கொள்கையைக் கைவிட்டுவிட்டார்கள், அபிவிருத்திதான் இப்போது அவர்கள் கொள்கை' என்று இந்திய அதிகாரிகளிடம் இரா.சம்பந்தன் சொன்னாரா என்பது இறைவ னுக்குத்தான் தெரியும்.
நொடிக்கு நொடி சிங்களக் குடியேற்றத்தால் திட்டமிட்டு விழுங்கப்பட்டுத் தன் 'தாயக அடையாளத்தை' இழந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில் தமிழீழத் தாயக 'மீட்பு 'க்கு இந்தியாவின் துணை தேவை என்று தமிழீழ மக்கள் ஏங்கிநிற்கும் ஒருகாலச்சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தம்மைத் தாமே சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.
தந்தை செல்வா தலைமையில் தமிழரசுக் கட்சியினர்தான் 1976இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழீழத் தாயகக் கோட்பாட்டை உறுதிசெய்து அதன் விடுதலைக்கான கோரிக் கையையும் தீர்மானமாக நிறைவேற்றித் தந்தார் கள். அதே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த இரா. சம்பந்தன் தமிழீழ மக்கள் தலையில் இப்படி அள்ளி வைக்கலாமா? தமிழீழ அபிவிருத்திக் காக அல்ல தமிழீழ விடுதலைக்காகவே 40,000 மாவீரர்கள் தங்கள் இன்னுயிரைக் கொடையா கத் தந்தார்கள், என்றுள்ளது. (ஓ,இ)

# வீட்டில் கஞ்சாச் செடி...

யான மருந்துகளை வைத்திருந்த சந்தேகத் தில் இன்னும் ஒருவரும் அந்தப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார் என சாவகச் சேரி பொலிஸார் தெரிவித்தனர்.
நாவற்குழியில் குற்றச் செயல்கள் இடம் பெறுகின்றன என கிடைத்த இரகசிய தகவ லையடுத்து பொலிஸாரும் இராணுவத்தி னரும் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப் பட்டனர் என பொலிஸார் கூறுகின்ற னர். (ஓ,159)

# இரணைமடு....

வான் கதவுகள் முழுமையாகத் திறக்கப்படவில்லை. இரண்டு ரேடியல் வாயில்கள் மாத்திரம் 6 அங்குலங்களில் இன்று மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டன.
முன்னதாக இன்று காலை வெளியிடப்பட்ட அறிவிப்பின் பிரகாரம், இன்று மாலை அல்லது நாளை காலை இரணைமடுக் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன எனக் கூறப்பட்டது. ஆனால் வளிமண் டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியதைப் போன்று இன்று மதியத்திலிருந்து மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறாமையால் வான் கதவுகள் முழுமையாகத் திறக்கப்படவில்லை.
36 அடி கொள்ளளவு உடைய கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் இன்று காலை 33.06 அடியாகக் காணப்பட்டது. (ஓ,5)

# பிரிட்டனைத் தாக்கும்...

விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து தீவிர அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் சங்கம் தெரிவித்துள்ளது.
மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் கீர்த்தி விக்ரமரத்ன இது தொடர்பில் தெரிவித் ததாவது,
பிரிட்டனிலிருந்து நபர்கள் வருகை தரும் போதும் அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போதும் அந்த வைரஸ் பரவக் கூடிய அபாயம் உள்ளது. இந்த வைரஸ் பரவல் காரணமாக ஐரோப்பிய நாடுகளும் இந்தியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இஸ்ரேல் போன்ற நாடுகளும் பிரிட்டனுக்கான விமானப் பயணங்களை இரத்துச் செய்துள்ளன, என்ப தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதனிடையே கொரோனா வைரஸின் புதிய உருமாற்றம் ஆஸ்திரேலியா, டென்மார்க் முதலான நாடுகளிலும் அவதானிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,இ)

# இனி எமக்கே மக்கள் ஆணை

## சஜித் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 22

இனி நடைபெறும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்திக்கே மக்கள் அமோக ஆணையை வழங்குவார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை முன்வைப்பதில் இந்த அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. எனவே, எந்த தேர்தல் நடைபெற்றாலும் பிரதான எதிர்க்கட்சிக்கே மக்கள் அமோக



ஆணை வழங்குவார்கள் என நம்புகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தி என்பது சந்தர்ப்பவாத அரசியலை முன்னெடுக்கும் கட்சி கிடையாது. குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எந்தத் தரப்புடனும் நாம் கூட்டணி வைத்துக்கொள்ளமாட்டோம். எனினும், எமது மக்கள் சார்பு கொள்கைகளை ஏற்று செயற்படக்கூடியவர்கள் எம்முடன் இணைந்து பயணிக்கலாம்’ என்றார். (ம-44)



சுன்னாகம் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றால் சுயதனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு, சோல்வ் (SOLVE) நிறுவனத்தின் நிறுவுநர் பவதாரணி ராஜசிங்கத்தால் உலர் உணவு , நுளம்பு வலை மற்றும் அத்தியாவசிய பொருள்கள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ரி5)



ஜேர்மன் சுர்காட் சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினரால், வவுனியா தவசிகுளம் பால விநாயகர் வீதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு, தற்காலிக இல்லம் அமைப்பதற்கான அடிக்கல், சமூக செயற்பாட்டாளர் தனுபனால் நடப்பட்டது. (க)

### மஹியங்கனையில் மீன் மழை!

கண்டி, டிசெ. 22

மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ‘விரானகம’ என்ற கிராமத்தில் மீன் மழை பெய்துள்ளது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் மீன் மழை பெய்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வீடு மற்றும் வயல் நிலங்களுக்கு முன்னால் இவ்வாறு மீன்கள் விழுந்தன எனவும் ஒரு சிலர் விழுந்த மீன்களை எடுத்து சென்றுள்ளனர் எனவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டினர். (ரி5இ)

### விதிமுரண் வர்த்தகம்

## பருத்தித்துறை வியாபாரிகளை எச்சரித்த சுகாதாரத் துறையினர்

கொடிகாமம் டிச 22

பருத்தித்துறை நகர்ப்பகுதியில் கட்டுப்பாடுகளை மீறி மீன் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளை பருத்தித்துறை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் எச்சரித்து அனுப்பினர்.

கொரோனா பரவல் சந்தைகளூடாக யாழ்ப்பாணத்தில் ஊடுருவியுள்ள நிலையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைய வடமாகாணத்தில் அனைத்து பொது சந்தைகளும் மூடப்பட்டன.

வியாபாரிகளை சமூக இடைவெளியுடன் கொரோனாக் கட்டுப்பாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி சந்தை மற்றும் அதன் வீதியோரம் தவிர்ந்த பகுதிகளில் மரக்கறி மற்றும் மீன் வியாபாரம் செய்ய பருத்தித்துறை நகரசபை அறிவுறுத்தியிருந்தது.

இதுகுறித்து ஒலிபெருக்கியூடாகவும் தொடர்ந்து அறிவுறுத்தியும் அதனைப் புறக்கணித்து சந்தை அருகேயுள்ள சந்தை வீதியில் அதிகளவான மீன் மற்றும் மரக்கறி வியாபாரிகள் நெருக்கமாக ஒன்று கூடியதால் வியாபாரிகளை அங்கிருந்து சுகாதாரத் துறையினர் எச்சரித்து அனுப்பினர். (ம-159)

## திருவெம்பாவையின்போது இம்முறை ஊர்வலமில்லை

கொழும்பு, டிசெ. 22

இந்துக்களால் மார்கழி மாதத்தில் நடத்தப்படும் திருவெம்பாவை ஊர்வலமானது சமகால கொரோனா தொற்றுக் காரணமாக இம்முறை இடம்பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவெம்பாவை விரதம் நேற்று ஆரம்பமாகி 30ஆம் திகதி திருவாதிரையுடன் நிறைவடைகிறது. இக்காலப்பகுதியில் இந்துக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அதிகாலை திருப்பள்ளியெழுச்சி ஊர்வலம் நடைபெறுவது வழமையாகும். ஆனால் இம்முறை கொரோனா பரவல் காரணமாக அதனை நடத்தமுடியாத நிலையெழுந்துள்ளது. ஊர்வலத்தை தவிர்த்து ஆலயங்களில் அதிகாலைப் பூசை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சுகாதார முறைப்படி நடத்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. (ஐ-இ)

## ஆஸ்திரேலிய புலனாய்வுத் துறையால் இலங்கைக்கு மருத்துவப் பொருள்கள்

கொழும்பு, டிசெ. 22

இலங்கையில் கொவிட்19 தொற்று நோய் பரவலை எதிர்த்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக அவசரமாகத் தேவைப்படும் மருத்துவப் பொருள்களை ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸ் துறையின் புலனாய்வுப் பிரிவு கண்காணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொப் வில்சன் வழங்கியுள்ளார். இலங்கையின் சிரேஷ்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபரான லலித் பத்திநாயக்கவிடம் அந்த மருத்துவப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன பொலிஸ் அதிகாரிகளிடேயே இந்நோய் மேலும் பரவும் ஆபத்தைக் குறைப்பதற்கும் இலங்கை பொலிஸார் தமது கடமைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் உதவும் மருத்துவ உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. (ஐ-இ)



### கம்பஹா மருத்துவமனையில்

## கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்க புதிய பிரிவு

கொழும்பு, டிசெ. 22

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க கம்பஹா மாவட்ட பொதுமருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய பிரிவு உலக வங்கியின் உதவியுடன் சுமார் 22 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன தெரிவித்தார்.

இலங்கை விமானப்படையின் 70ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு சமூக சேவையாக இலங்கை விமானப்படையின் 45 உறுப்பினர்களின் உழைப்புடன் இந்த தீவிர சிகிச்சை பிரிவின் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (மஇ)

# வவுனியாவில் தனிமையிலுள்ளோர் பட்டினியை எதிர்கொள்ளும் அவலம்

வவுனியா, டிசெ. 22

வவுனியாவில் கொரோனா அச்சத்தால் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசால் எந்தவிதமான நிவாரணங்களும் வழங்கப்படாததால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் வவுனியா திருநாவற்குளம் பகுதியில் பலர் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு 6 நாள்கள் கடக்கின்ற நிலையிலும் அவர்களுக்கு எந்த விதமான நிவாரண உதவிகளும் கிடைக்கப்பெறவில்லை. இதேபோல் கற்குழியில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மாணவியுடன் தொடர்புகளைப் பேணினர் என பூந்தோட்டம் ஸ்ரீநகர் கிராமத்திலும் சிலகுடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கும் எந்தவித நிவாரணங்களும் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கூலித்தொழிலை நம்பி இருக்கும் குறித்த குடும்பங்கள் தனிமைப்படுத்தல் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கான உதவிகளை அதிகாரிகள் வழங்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ப-110)



ஒரு மில்லியன் பயன்தரு மரக்கன்றுகள் நடும் கற்பகா திட்டத்தின் கீழ் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு பயன்தரு பழமரக்கன்றுகள் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பினால் வழங்கப்பட்டன. (ரி5-159)

## விதிகளை மீறிய 23 பேர் கைது

கொழும்பு, டிசெ.23

கடந்த 24 மணிநேரத்தில் சமூக இடைவெளியைப் பின்பற்றாத மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 30ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் விதிமுறைகளை மீறிய ஆயிரத்து 675பேர் கைதாகியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார். (ச)

## 420 பேர் தாயகம் வருகை

கொழும்பு, டிசெ.23

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள 420 இலங்கையர்கள் இன்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதன்படி ஜேர்மனியிலிருந்து 267 பேரும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 48 பேரும் கட்டாரிலிருந்து 57 பேருமே தாயகம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## எஹலியகொட பகுதியில் தொற்றாளர் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.22

இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பகுதியில், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார். இதற்கமைய, எஹலியகொட பகுதியில் இதுவரை 310 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், இரத்தினபுரி நகர் எல்லைக்குள் மாத்திரம் கடந்த 3 தினங்களில் 76 தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இரத்தினபுரி நகரில் 200 க்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, நவ.22

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, பொலநறுவை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும், 100 மில்லி மீற்றருக்கு அதிக மழை வீழ்ச்சி இன்று பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன், வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல் ஆகிய மாகாணங்களின் சில இடங்களில் இடைக்கிடையே மழை பெய்யலாம் என திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ச)

## விபத்தில் தந்தை, மகன் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ.22

ஹொரண கொழும்பு வீதியின் ஜாலியகொட பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தந்தையும் நான்கு வயது மகனும் உயிரிழந்துள்ளனர். தாய் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியின் நடுவே வைக்கப்பட்டிருந்த பூச்சாடியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பண்டிகைக் கடமையில் 9 ஆயிரம் பொலிஸார்



கொழும்பு, டிசெ.22

பண்டிகைக் காலங்களில் பொலிஸ் வாகனங்களை கடமைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென 9 ஆயிரம் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்த விசேட நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## புதையல் தோண்டிய இளைஞர்கள் கைது!

கேகாலை, டிசெ. 22

எட்டியாந்தோட்டை பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 21 வயதான இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எட்டியாந்தோட்டை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும், பூசைப்பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளனஎன பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக எட்டியாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ரி5,இ)

## கொரோனாவிலிருந்து விடுபட வரணியில் விசேட வழிபாடு

கொடிகாமம், டிசெ. 22

வரணி, சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் நேரடி ஒலிபரப்பாகியிருந்தது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அறிவுறுத்தலுக்கமைய நாடளாவிய ரீதியில் கொவிட் - 19 தாக்கத்தால் அல்லல்படும் மக்களின் நலன் வேண்டி ஆலயங்களில் விசேட வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-159)



# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.22

நாட்டில் நான்கு மாவட்டங்களுக்கு மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது. கண்டியில் தொலுவ மற்றும் உடுதும்பற பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கும், பதுளையில் கந்தகெட்டிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களுக்கும், மாத்தளையில் நாவுல மற்றும் நுவரெலியாசில் வலப்பனை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களுக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் என்பன வழங்கும் அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றுமாறும் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (வ-இ)

# திருமலையில் கடற்றொழில் பாதிப்பு!

திருகோணமலை, டிசெ.22

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் காற்று மற்றும் மழையின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் திருகோணமலை, மூதூர், சம்பூர், கிண்ணியா, வெருகல், குச்சவெளி மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில்லை. கடந்த இரு நாள்களாக இந்த நிலை நீடிப்பதால், மீன்பிடி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இன்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக கடலுக்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ற-40)





திருமலையில்

# 24 மணி நேரத்தில் 21 தொற்றாளர்கள்

திருகோணமலை, டிசெ.22

திருகோணமலையில் கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் 21பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதையடுத்து திருமலை நகரில் முருகாபுரி, ஜின்னாநகர், அபயபுரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார். திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, திருகோணமலையில் கடந்த 24 மணி நேரத்தில் அடையாளம் காணப்பட்ட 21 தொற்றாளர்களில் 6 பாடசாலை மாணவர்கள் உள்ளடங்குவதால், அவர்களுடைய பாடசாலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களை சுய தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பேலியகொட மீன் சந்தை கொத்தணி மூலமாக இதுவரை கிழக்கு மாகாணத்தில் 778 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிலே திருகோணமலை மாவட்டத்தில் 40 பேரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 102 பேரும் அம்பாறையில் 23 பேரும் கல்முனை பிராந்தியத்தில் 613 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். (வ-இ)

# தடுப்பு மருந்து கொள்வனவு; பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.22




கொரோனாவுக்கான தடுப்பு மருந்தை ரஸ்யாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவருவது தொடர்பில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

இதன்படி எதிர்வரும் வாரம் ரஸ்ய தூதுவருடன் முக்கிய பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

மேலும், பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தால் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட மருந்துகள் கிடைப்பதற்கு முன்னரே ரஸ்ய மருந்தான ஸ்புட்னிக் வி தடுப்பூசி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் நாட்டுக்கு கொண்டுவரமுடியும். இதேவேளை தனியார் மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

தனியார் துறையினர் ஊடாக மருந்துகளை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது மொடேர்னா மற்றும் பைசர் நிறுவனத்தின் மருந்துகள் மற்றும் சீன மருந்துகள் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றது. விலை, சேமிப்பதற்கான காலநிலை போன்றன அடிப்படையில் எந்த மருந்தை விரைவில் இலங்கைக்கு கொண்டுவரமுடியும் என தீர்மானிக்கவுள்ளோம் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந)

# கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, டிசெ.22

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாளங்குடாவில் சக்திவாய்ந்த கைக்குண்டு ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது என காத்தான்குடி பொலிஸ் நிலைய சிறுகுற்ற தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கே.எல்.எம். முஸ்தபா தெரிவித்தார்.

ஆரையம்பதி தாளங்குடா கடற்கரை வீதியின் காட்டுப்பகுதியிலுள்ள வெற்றுக் காணியை கூலித் தொழிலாளியொருவர் துப்புரவு செய்து கொண்டிருந்தபோதே இந்தக் கைக்குண்டு பொலிசாரினால் சுற்றப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# மறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ.22

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி வரையான 14 நாள்களுக்கு அவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி. ரிஷ்வான் உத்தரவிட்டுள்ளார்.

இவர் ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய கடந்த மாதம் 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் வழக்கு விசாரணை இன்று இணையவழியாக மேற்கொள்ளப்பட்டபோதே விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# திருவெண்பா ஓதுதல் பல்கலையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்.பல்கலைக்கழகத்தில் திருவெண்பா ஓதுதல் நிகழ்வு நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜாவின் அனுமதியுடன் கலைப்பீடத்தின் 40வது அணி மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், அனைத்து மாணவர்களையும் இணைந்து கொள்ளுமாறும், அனைத்து விரதங்களையும் சிறப்பாக பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிப்பதற்கு ஆதரவு வழங்குமாறும் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் மாணவர்கள் கோரிக்கையும் விடுத்துள்ளனர். (ரி5)

# சமூக ஊடகங்களை அடக்க முயலும் அரசு

## சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.22

சமூக ஊடகங்களின் பயன்பாட்டை அடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சமூக ஊடகங்களை பயன்படுத்துவோரை பதிவு செய்யும் அரசாங்கத்தின் செயற்பாடு ஜனநாயக விரோத செயல். இதுபோன்ற முடிவுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நிற்கும். சமூக ஊடகத்துக்கான சுதந்திரம் அவசியம். பல சந்தர்ப்பங்களில் தான் சமூக ஊடகங்கள் மூலம் தனிப்பட்ட முறையில் தாக்கப்பட்டேன். ஆனாலும் கருத்துரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# கொரோனாவை ஜனவரிக்குள் மேல் மாகாணத்தில் ஒழிப்போம்!

## பசில் ராஜபக்ச தெரிவிப்பு!



கொழும்பு, டிசெ.22

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஒரு கொவிட் தொற்றாளரேனும் இனங்காணப்படாத மாகாணமாக மேல் மாகாணத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச நேற்றுத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் கிராமத்துக்கான தேசிய வேலைத்திட்டத்தின் மேல் மாகாணத்துக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சிக்கான பயணமும் வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவது மேல்மாகாணத்தில் தான். எனவே ஜனவரி மாதம் தொடக்கம் ஒரு கொவிட் தொற்றாளரேனும் இனங்காணப்படாத மாகாணமாக மேல் மாகாணத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இவ்வாறு மாற்றியமைக்காது மேல்மாகாணம் தொடர்ந்து கொரோனாவால் முடக்கப்படுமாயின் முழு நாட்டுக்கும் இது மிகப் பெரியதொரு பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.(ற-இ)

# லிந்துலைப் பகுதியில் 15 பேருக்கு தொற்று!!

நுவரெலியா, டிசெ.22

நுவரெலியா லிந்துலை சுகாதார மருத்துவ காரியாலயத்துக்குட்பட்ட பிரிவில் 15 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டயகம மேற்கு தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேருக்கும், அக்கரப்பத்தனை நியூ போர்ட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த 3 பேருக்கும், லிந்துலை வோல்ட்ரீம் தோட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்பு பகுதிகளிலிருந்து வருகை தந்தவர்களாலேயே இந்தத் தொற்று ஏற்பட்டுள்ளது என சுகாதார அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (ற)

# தனிமைப்படுத்திய பெண் உயிரிழப்பு!!

## அடக்கம் குறித்து விசாரணை ஆரம்பம்

களுத்துறை, டிசெ.22

தனிமைப்படுத்தலில் இருந்த பெண் திடீரென உயிரிழந்ததை அடுத்து அவரது சடலம் இரகசியமாக அடக்கம் செய்யப்பட்டது.

களுத்துறை, பேருவளை சீனக் கோட்டை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்த விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் 78 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவர் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தார்.

அந்த வீட்டில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் அந்த வயோதிபப் பெண் உயிரிழந்ததை அடுத்து அவரது உறவினர்கள் சுகாதார அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தாது அடக்கம் செய்துள்ளனர். இது குறித்து பேருவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ற-இ)

# விமானப் பயணிகளுக்கான நடைமுறையில் மாற்றங்கள்

கொழும்பு, டிசெ.22

வெளிநாட்டு அமைச்சு, குடிவரவு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவை இணைந்து 2020 ஆம் ஆண்டு மார்ச் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கைக்கு வரும் பயணிகளுக்கான நடைமுறையில் மேலும் சில திருத்தங்களை கொண்டுவந்துள்ளன. இவை எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 26 ஆம் திகதி முதல், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள், நோயாளிகள், குறுகிய கால விசாக்களையுடையவர்கள், அரசாங்க மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோரை, அரசாங்க தனிமைப்படுத்தல் வசதிகளுக்காக விஷேடமாக மீளழைத்து வரும் விமானங்களை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# சதொச கிளைகளில் குறைந்த விலையில் முகக்கவசங்கள்!!

கொழும்பு, டிசெ.22

சதொச கிளை மற்றும் இணை நிறுவனங்கள் மூலம் தரமான முகக்கவசங்களைக் குறைந்த விலையில் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மொத்த விற்பனையாளர்கள் 12 ரூபாவுக்கும் நுகர்வோர் 15 ரூபாவுக்கும் முகக்கவசங்களைக் கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சதொச நிறுவனத்தின் 15 ஆண்டு காலப் பூர்த்தியை முன்னிட்டு சதொச தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்த வாரம் தொடக்கம் தொற்று நீக்கிகளையும் குறைந்த விலைக்கு விநியோகிக்கக்க உள்ளோம் எனவும் அவர் இதன்போது கூறினார்.(றஇ)

# கன மழையால் மூழ்கும் நிலையில் போரதீவுப்பற்று

மட்டக்களப்பு, டிசெ.22

மட்டக்களப்பில் பெய்துவரும் கடும் மழையால் போரதீவுப்பற்று பிரதேசத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மழையால் தாழ் நிலங்களை அண்டிய கிராமங்களான பழுகாமம் கோவில் போரதீவு, பட்டாபுராம், பெரியபோரதீவு, முனைத்தீவு ஆகிய கிராமங்களில் மழை நீர் உட்புகுந்து மக்களின் வீடுகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மட்டக்களப்பு மண்டூர் வீதி உட்பட சில பிரதான வீதிகளின் ஊடாக வெள்ள நீர் பாய்வதால் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.(வ-இ)

# தற்காலிக கடைகள் அகற்றம்!!

புறக்கோட்டை பெஸ்டியன் மாவத்தையில் அமைக்கப்பட்டிருந்த 95 தற்காலிக கடைகள் நேற்று இரவு நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

அபிவிருத்தி நடவடிக்கை எனத் தெரிவித்து இந்தக் கடைகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர், இந்தக் கடைகளை அகற்றுமாறு, நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது எனவும் தெரியவருகின்றது.(றஇ)

# 1000 ரூபா சம்பள உயர்வு : பேச்சு டிசெம்பரில்

கொழும்பு, டிசெ.22

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை நேற்று திங்கட்கிழமை தொழில் அமைச்சில் நடைபெற்றது.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவும் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது முதலாளிமார் சம்மேளனத்தால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையில் தொழிலாளர்களுக்கு பாதகமாகவுள்ள விடயங்களை நீக்குவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. ஆனாலும் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பில் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இதனால் பேச்சுவார்த்தை மீண்டும் டிசம்பர் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ந)



# யோமகேஷ் ஓய்வு

புதுடில்லி, டிசெ.22

அனைத்து கிரிக்கெட் போட்டி களிலிருந்தும் ஓய்வு பெறுகின்றேன் என்று தமி ழக கிரிக்கெட் வீரர் யோமகேஷ் அறிவித்துள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவராக விளங்கிய யோமகேஷ் 50 முதல் தர போட்டிகளில் ஆடி 108 இலக்குகள் வீழ்த்தி இருக்கிறார். 2008 ஆம் ஆண்டு நடந்த முதலாவது ஐ.பி.எல். போட்டியில் டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்காக ஆடிய இவர் அந்த சீசனில் 11 ஆட்டங்களில் ஆடி 16 இலக்குகள் வீழ்த்தினார். 2012 ஆம் ஆண்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி 3 இலக்குகள் கைப்பற்றினார். காயத்தால் அவதிப்பட்ட இவர் 5 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் 2017 ஆம் ஆண்டு தமிழக அணிக்கு திரும்பினார். அந்த ஆண்டில் நடந்த மும்பைக்கு எதிரான ரஞ்சி போட்டியில் ஆட்டம் இழக்காமல் 103 ஓட்டங்கள் குவித்து தமிழக அணி முதல் சுற்றில் முன்னிலை பெற உதவினார்.

கடந்த ஆண்டில் (2019) நடந்த டி.என்.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றார். இந்த நிலையில் 33 வயதான யோமகேஷ் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுகிறேன் என அறிவித்துள்ளார்.(ற-இ)



# ஈபரைத் தோற்கடித்து ரியல் மாட்ரிட் வெற்றி!

மாட்ரிட், டிசெ.22

லா லிகா கால்பந்துத் தொடரில் ரியல் மாட்ரிட் அணி 31 என்ற கோல் கணக்கில் ஈபரை தோற்கடித்து வெற்றி பெற்றது.

லா லிகா கால்பந்துத் தொடர் ஸ்பெய்னில் நடைபெற்று வருகிறது. இதில் ஈபரில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் 34 முறை சம்பியனான ரியல் மாட்ரிட் அணி, ஈபர் கழக அணியைச் சந்தித்தது. அதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ரியல் மாட்ரிட் அணி 6 ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தது.

அந்த அணியின் நட்சத்திர வீரர் கரிம் பென்ஜிமா இந்தக் கோலை அடித்தார். 13 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணி அடுத்த கோலை போட்டது. கரிம் பென்ஜிமா கடத்திக் கொடுத்த பந்தை சக வீரர் லூகா மோட்ரிச் கோல் வளையத்துக்குள் திணித்தார். 28 ஆவது நிமிடத்தில் ஈபர் அணி பதில் கோல் திருப்பியது.

அந்த அணி வீரர் கார்சியா கிகே இந்தக் கோலை அடித்தார். முதல் பாதியில் ரியல் மாட்ரிட் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

பிற்பாதியின் கடைசி நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணியின் கரிம் பென்ஜிமா கடத்தி கொடுத்த பந்தை சக வீரர் லூகாஸ் வஸ்காஸ் கோலாக்கினார். முடிவில் ரியல் மாட்ரிட் அணி 3:1 என்ற கோல் கணக்கில் ஈபரை தோற்கடித்து வெற்றிபெற்றது. 14 ஆவது ஆட்டத்தில் ஆடிய ரியல் மாட்ரிட் அணி பெற்ற 9 ஆவது வெற்றி இதுவாகும்.(ற-இ)



# ஜோகோவிச் சாதனை

பெல்கிரேட், டிசெ.22

ரென்னிஸ் தரவரிசையில் நோவக் ஜோகோவிச் 300 வாரங்கள் முதல் இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளார். ரென்னிஸ் விளையாட்டில் தலைசிறந்த வீரராக சேர்பியாவின் ஜோகோ விச் திகழ்கிறார். இவர் ரென்னிஸ் தரவரிசையில் உலகில் முதல் நிலை இடத்தில் இருந்தார். இதன்மூலம் 300 வாரங்கள் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த 2 ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர் 20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற ரோஜர் பெடரர் 310 வாரங்கள் முதல் இடத்தில் இருந் துள்ளார். ஜோகோவிச் இன்னும் 10 வாரங்கள் இருந்தால் பெடரர் சாதனையைச் சமன் செய்வார்.

33 வயதாகும் ஜோகோவிச் 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி முதன்முறையாக ரென்னிஸ் தரவரிசையில் முதல் இடம் பிடித்தார். (ற-இ)



# நியூசிலாந்து அணியில் இடம்பிடித்த சான்ட்னர்

வெலிங்டன், டிசெ.22

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான நியூசிலாந்து அணியில் மிட்செல் சான்ட்னர் இடம் பிடித்துள்ளார்.

நியூசிலாந்து பாகிஸ்தான் அணி களுக்கு இடையிலான ரி20 கிரிக்கெட் தொடர் இன்றுடன் முடிவடைகிறது. அதன்பின்னர் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற இருக்கிறது. இதற்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அணியில் சான்ட்னர், அஜாஸ் பட்டேல் என இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் உள்ளனர். இவர்களில் சான்ட்னர் தேர்வு செய்யப் பட்டுள்ளார். 7 ஆவது இடத்தில் விளையாடுவதற்கு சகலதுறை ஆட்டக் காரர் அடிப்படையில் மிட்செல் சான்ட்னரை தேர்வு செய்துள்ளோம் என அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.(ற-இ)

# டெஸ்ட் தொடரிலிருந்தும் பாபர் அசாம் விலகல்!!

இஸ்லாமாபாத், டிசெ.22

பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாமின் காயம் இன்னும் சரியாகாததால் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இருந்தும் விலகியுள்ளார்.

ரி20 மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி நியூசிலாந்து சென்றுள்ளது. தற்போது மூன்று போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. 3 ஆவது மற்றும் கடைசி போட்டி இன்று நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கு தயாரானபோது பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாமுக்கு காயம் ஏற்பட்டது. அதனால் ரி20 தொடரில் அவர் விளையாடவில்லை.

ரி20 தொடர் முடிந்த பின்னர் முதல் டெஸ்ட் எதிர்வரும் 26 ஆம் திகதியும், 2 ஆவது போட்டி ஜனவரி 3 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் காயம் இன்னும் குணமடையாததால் பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் முதல் டெஸ்டில் இருந்து விலகி யுள்ளார். (ற-இ)

# கொரோனா தடுப்பூசியால் பெண்களுக்கு தாடி வளரும்

## பிரேசில் ஜனாதிபதியின் கண்டுபிடிப்பு

பிரேசிலியா, டிசெ.22

கொரோனாவுக்கு எதிராக பைசர்பயோன்டெக் தடுப்பூசியை போட்டுக்கொள்ளும் பெண்களுக்கு தாடி வளரும் எனவும் அதைப் போட்டுக் கொள்வோர் முதலையாக மாறலாம் என்றும் பிரேசிலிய ஜனாதிபதி ஜயிர் போல்சொனாரோ கருத்துத் தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்று



சாதாரண சளிக்காய்ச்சலே என்று தெரிவித்து வரும் அவர், தடுப்பூசியைத் தான் போட்டுக்கொள்ளப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார். பிரேசிலில் தடுப்பூசி இலவசம் என்றாலும் அதனைப் போட்டுக்கொள்வது கட்டாயமில்லை என்று அவர் தெரிவித்துள்ள போதும் மக்கள் தடுப்பு மருந்து போட்டுக்கொள்வது அவசியம் என்று அந்நாட்டின் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (வ-இ)

## உருமாறிய கொரோனாவால் பிரிட்டனுக்குப் பயணத் தடை

நியூயோர்க், டிசெ.22

பிரிட்டனில் உருமாறிய புதிய வகை கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் பிரிட்டனுக்கான வான் வழி மற்றும் தரைவழிப் போக்குவரத்தை பல் வேறு நாடுகள் நிறுத்தியுள்ளன.

பிரிட்டனில் உருவாகியுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் பி.1.1.7 என அறியப் படுகிறது. இது ஏற்கனவே பரவிய வைரசை விட அதிக வீரியமிக்கதாக உருமாறி, 70 சதவீதம் வேகமாக பரவுகிறது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அதையடுத்து பெல்ஜியம், கனடா, போர்த்துக்கல், அயர்லாந்து, ரோமானியா, ரஷ்யா, சுவிஸர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி உட்பட 40க்கும் மேற்பட்ட நாடுகள் பிரிட்டனுக்கான போக்குவரத்துத் தொடர்பை இரத்துச் செய்துள்ளன. (வ-இ)

## உருமாறிய கொரோனாவை கட்டுக்குள் கொண்டுவரலாம்

### உலக சுகாதார அமைப்பு நம்பிக்கை

ஜெனிவா, டிசெ.22

பிரிட்டன், தென்னாபிரிக்க நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட உருமாறிய கொரோனா வைரஸ் நமது கட்டுப்பாட்டை மீறி இன்னும் செல்லவில்லை, அதைக் கட்டுப் படுத்த வழிமுறைகள் உள்ளன என்று உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பின் அவசரகால பிரிவின் தலைவர் மருத்துவர் மைக்கேல் ரோயான் நேற்றுத் தெரிவித்துள்ளதாவது,

உலகின் பல நாடுகளில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்துள்ளது எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால், அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கிறது. அதாவது சூழல் நமது கட்டுப்பாட்டை மீறி இல்லை என்பதுதான் உண்மை. உருமாறிய கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த சரியான வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. நாம் இப்போது செய்து கொண்டிருப்பதை தொடர்ந்து செய்தால் போதுமானது. ஆனால், அவற்றை இன்னும் சற்று தீவிரத்தன்மையுடனும், நீண்ட காலத்துக்கும் செய்வது வைரஸ் பரவலைக் கட்டுக்குள் வைக்கும் என்றார். (வ-இ)



# பைடனுக்கு தடுப்பூசி

வொஷிங்டன், டிசெ.22

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோபைடன் நேற்று கொரோனாவுக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

அமெரிக்காவின் டெலாவேர் மாகாணத்தில் நியூவார்க் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் ஜோ பைடனுக்கு பைசர் தடுப்பூசி நேரலையில் வழங்கப் பட்டது.

அதன் பின் கருத்துத் தெரிவித்த பைடன், மருந்து கிடைக்கும்பொழுது தவறவிடாது அதனைப் பெற்றுக்கொள்ளுங்கள் என நாட்டு மக்களை வலியுறுத்தியுள்ளார். (வ-இ)

## புதியவகை கொரோனாவை பைசர் தடுப்பூசி அழிக்கும்

### விஞ்ஞானிகள் நம்பிக்கை

நியூயோர்க், டிசெ.22

பிரிட்டனில் உருவெடுத்துள்ள புதிய வகை கொரோனா வைரஸை தற்போது பயன்பாட்டிலுள்ள தடுப்பு மருந்துகளே கட்டுப்படுத்தும் என ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள சுகாதாரத் துறை விஞ்ஞானிகள் மற்றும் ஜேர்மனி சுகாதாரத்துறை அமைச்சர் ஜென்ஸ் ஸ்பான் தெரிவித்துள்ளார்.

தற்போதுவரை நமக்கு கிடைத்த தகவலின்படி, புதியவகை கொரோனா வைரஸ் பயன்பாட்டில் உள்ள தடுப்பூசியில் (பைசர் தடுப்பூசி) எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. புதியவகை கொரோனா வைரஸையும் தற்போதுள்ள தடுப்பூசிகள் கட்டுப்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)



# தீ விபத்துக்கான மர்மம் இன்னும் அவிழவில்லை



கொழும்பு, டிசெ. 22

கொழும்பு புதுக்கடை உயர் நீதிமன்ற வளாகத்தில் கடந்த 15ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்துக்கு மின்சார கசிவு காரணம் இல்லை. ஆனாலும் தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

தீ விபத்துத் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் மின்சார சபையால் இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துத் தொடர்பில் அரச இரசாயன பகுப்பாய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ.இ)

# சாவு....

17 ஆம் திகதி சிறைச்சாலை மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். கொவிட் நிமோனியா காரணமாக அவர் உயிரிழந்துள்ளமையை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

கொழும்பு 15 பகுதியை சேர்ந்த 55 வயதான ஆண் ஒருவர், கடந்த 19 ஆம் திகதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். கொவிட் நிமோனியா மற்றும் சிறுநீரக செயலிழப்பு என்பன அவரது உயிரிழப்புக்கு காரணமென அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தர்கா நகரை சேர்ந்த 77 வயதான ஆண் ஒருவர், கடந்த 18 ஆம் திகதி வீட்டில் உயிரிழந்துள்ளார். கொரோனா தொற்றுடன் ஏற்பட்ட இருதய நோயால் அவர் உயிரிழந்துள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, மக்கொன பகுதியைச் சேர்ந்த 63 வயதான பெண் ஒருவர், கடந்த 19 ஆம் திகதி தமது வீட்டில் உயிரிழந்துள்ளார். கொரோனாவுடன் ஏற்பட்ட நீரிழிவு, உயர் குருதி அழுத்தம் மற்றும் இருதய நோயால் அவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்த 83 வயதான ஆண் ஒருவருக்கு, கொழும்பு தேசிய மருத்துவமனையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் ஹோமாகம ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தநிலையில், அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொவிட் நிமோனியா காரணமாக அவர் உயிரிழந்துள்ளதாகவும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. இந்த தகவல்களுக்கமைவாக இன்று அறிவிக்கப்பட்டுள்ள 5 கொரோனா உயிரிழப்புக்களுடன் நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 181 ஆக அதிகரித்துள்ளது. (ஒ.இ)